
# சமூக மோதல்கள்

## ஓர் கோட்பாட்டு அறிமுகம்



கலாநிதி.எஸ்.ஐ.கீதபொன்கலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Paul

# SOCIAL CONFLICTS

## A THEORATICAL INTRODUCTION

S. I. Keethaponcalan, Ph. D

United Nations Development Programme

Sri Lanka

2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© S. I. Keethaponcalan, 2004

Published by
Strengthening Information Capacities for the Peace Process:
Small Grants Programme of the United Nations Development
Programme, Sri Lanka.

**Printed by**

**Dreamland Printers**
**139, Sir Ratnajothy Saravanamuthu Mw.,**
**Colombo - 13.**

Cover Design :
***Sutheshna Kodeeswaran***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மோதல்கள்

## ஓர் கோட்பாட்டு அறிமுகம்

கலாநிதி
எஸ். ஐ. கீதபொன்கலன்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்
இலங்கை
2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© **எஸ். ஐ. கீதபொன்கலன், 2004**

வெளியீடு :
சமாதான செயன்முறையின் தகவல் திறனை வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கைக் கிளையின் சிறு நிதித்திட்டம்.

அச்சிட்டோர் :
**டிரீம்லேண்ட் பிரின்டர்ஸ்**
**இல. 139, சர் ரத்னஜோதி சரவணமுத்து மாவத்தை, கொழும்பு-13.**

அட்டை வடிவமைப்பு :
***சுதேஷ்ணா கோடீஸ்வரன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. முன்னுரை | 01 |
| 2. அறிமுகம் | 03 |
| 3. முரண்பாடும் மோதலும் | 04 |
| 4. பயன்மிகு மோதல் | 05 |
| 5. மோதல் என்பது யாது? | 07 |
| 6. மோதல் மூலக்கூறுகள் | 11 |
| 7. மோதல் காரணிகள் | 16 |
| 8. மோதல் மட்டங்கள் | 20 |
| 9. மோதல்களின் வகைகள் | 22 |
| 10. மோதல் செயன்முறை | 24 |
| 11. மோதல் ஆய்வு | 30 |
| 12. முடிவுரை | 34 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. முன்னுரை

மோதல் என்பது மனித சமூகத்திற்குப் புதிய ஒரு விடயமல்ல. மானிடம் தோன்றிய காலத்திலிருந்து, குறிப்பாக மனிதர்களுக்கிடையில் உறவு தோன்றியதிலிருந்து மோதல் என்பதும் காணப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் அண்மைக் காலங்களில் சமூகம் நவீனத்துவமடைகின்ற செயல்முறையுடன் இணைந்த வகையில் மோதல்களின் அழிவுத் தன்மையும் அதிகரித்து வந்திருக்கின்றது. எனவே மோதல்கள் சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்கின்ற ஆர்வம் அக்கறையுடையோர் மத்தியில் உறுதியடைந்துள்ளமை வியப்பிற்குரியதல்ல. வேறுபட்ட பல காரணிகளுடன் இணைந்த வகையில் இவ்வார்வம் ''மோதல் தீர்வியல்'' எனும் புதிய பாடத்துறையின் தோற்றத்திற்கு வித்திட்டிருந்தது.

ஏனைய துறைகளுடன் ஒப்பிடுகையில் புதியதொன்றாக இருந்த போதும் மோதல் தீர்வியல் இன்று மேற்கு நாடுகளின் கல்வி நிறுவனங்களில், குறிப்பாக பல்கலைக்கழகங்களில் பெரிதும் வேரூன்றியுள்ளதொன்றாக அபிவிருத்தி அடைந்துள்ளது. அழிவுத் தன்மையுடைய இன மோதல்களைப் பெருமளவிற்கு கொண்டுள்ள மூன்றாம் உலக நாடுகள் என்று முன்னர் அழைக்கப்பட்ட பொருளாதார ரீதியாகப் பின்னடைந்த நாடுகள் பலவற்றிலும் மோதல் தீர்வியல் பிரபல்யமான ஒரு பாடவிதானமாக மாறிவருகின்றது. இங்குள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் மோதல் தீர்வியல் வேகமாக அறிமுகப்படுத்தப்பட்டுவருகின்றது. அவ்வகையில் இன்று இலங்கையின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் ஏனைய கல்வி நிறுவனங்களிலும் மோதல் தீர்வு ஒரு பாடநெறியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான பிரதானமான காரணிகளில் ஒன்று இலங்கையில் காணப்படுகின்ற இன மோதலாகும். இனமோதலும் அதன் காரணமாக ஏற்பட்டுள்ள யுத்தமும் தீவிர அழிவுத்தன்மை உடையவையாக மாற்றமுற்றிருந்தன. இது இச்சமூகத்தின் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் நிறுவனங்களின் அடிப்படைகளை தகர்க்கக்கூடிய இயலுமை உடையதாகக் காணப்பட்டிருந்தது. எனவே இம் மோதல் சமாதானமாகத் தீர்க்கப்படவேண்டும் எனும் விருப்பம் பல்வேறு தரப்பினரிடையேயும் மேலோங்கியுள்ளது. இதன் காரணமாக இன்று மோதல் தீர்வியலுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றி சமூகத்தின் வேறுபட்ட மட்டங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன.

மோதல் தீர்வியல் எந்தளவிற்கு விரும்பி ஏற்கப்படுகின்றதோ அதேயளவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சிக்கப்படுகின்ற, அல்லது கண்டனத்திற்குள்ளாகின்ற ஒரு விடயம் என்பதிலும் சந்தேகமில்லை. இக்கண்டனங்கள், விமர்சனங்கள் என்பவற்றிற்கிடையிலும் ''மோதல்,'' ''மோதல் தீர்வு'' என்பவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள் பலவற்றை விளங்கிக் கொள்வதில் உதவக் கூடிய எண்ணக்கருக்களை மோதல் தீர்வியல் முன்வைக்கின்றது என்பது கவனத்திலெடுக்கப்படவேண்டும்.

இவ்வெண்ணக்கருக்களை இன்று மோதல் தீர்வியலை ஒரு பாடநெறியாக கற்கின்ற மாணவர்களுக்கும், மோதல் தீர்வு முயற்சிகளில் நேரடியாகத் தொடர்புடைய பல்வேறுபட்ட தரப்பினருக்கும் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமொன்று காணப்படுகின்றது. எனவே மோதல் தீர்வியலுடன் தொடர்புடைய அடிப்படையான மூலக்கூறுகள் சிலவற்றை அறிமுகப்படுத்தும், எளிமையான வகையில் எழுதப்பட்ட சிறிய கைநூல்களின் ஏட்டுவரிசை ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

அவ்வகையில் ஏட்டுவரிசையின் முதலாவது வெளியீடாகிய இக்கைநூல் சமூக மோதல் எனும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பல்வேறு பரிமாணங்களையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்கின்றது. இன்று எமது சமூகத்தில் காணப்படுகின்ற அடிப்படைப் பிரச்சினைகள் சிலவற்றை விளங்கிக் கொள்வதிலும், அவற்றுக்கானத் தீர்வு பற்றிச் சிந்திப்பதிலும் பங்காற்றக் கூடிய இயலுமை இந்நூலுக்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் இந்நூல் வெளியிடப்படுவதில் உதவிய பலருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டிய ஒரு கடற்பாடும் உள்ளது. அவ்வகையில் இம்முயற்சியின் பெரும் பங்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட இலங்கைக் கிளையையே சாரும். நூல் வெளியிடப்படுவதற்குத் தேவையான நிதியை வழங்கி ஒத்துழைத்தமைக்கு நிறுவனத்திற்கு முதல் நன்றிகள். நூலை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய டிரீம்லாண்ட் அச்சகத்தினருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டியது எனது கடமையாகும். அத்துடன் அட்டை வடிவமைப்பில் உதவிய சுதேஷ்ணா, பிழை திருத்தத்தில் உதவிய வத்சலாதேவி, மற்றும் இந்நூலின் ஒவ்வொரு கட்டத்திலும் உதவிய என் மனைவி மெட்டில்டா ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

**கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன்**
**அரசறிவியற்துறை**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அறிமுகம்

மோதல் எல்லோருக்கும் பொதுவான, எமது நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய ஒரு அம்சமாகும். அவ்வகையில் நம் எல்லோருக்கும் மோதலுடன் நேரடியான அனுபவங்கள் நிச்சயம் காணப்படும். அத்துடன் எம்மில் பலருடன் நேரடியாகத் தொடர்பு படாத பல மோதல்களையும் நாம் தினமும் அவதானித்து வருவதுமுண்டு. ஆயினும் மோதல்கள் எவ்விதம் ஏற்படுகின்றன, அவற்றுடன் தொடர்புடைய பரிமாணங்கள் யாவை என்பவற்றைப் பற்றிச் சிந்திப்பதற்கோ அல்லது புரிந்து கொள்வதற்கோ நாம் பொதுவாக முயற்சி செய்வதில்லை. இதன் காரணமாக எம்மில் பலருக்கு மோதல் பற்றிய அடிப்படை அறிவு இல்லாதிருப்பதற்கான சாத்தியம் பெருமளவிற்கு உண்டு. இக் குறைஅறிவு பல சந்தர்ப்பங்களில் மோதல்கள் எதிர்நிலைத்தன்மை உடையவையாக மாறுவதற்கு உதவுகின்ற அதேசமயம் மோதல்களை ஆக்கபூர்வமான அடிப்படையில் கையாள்வதற்கான ஒரு தடையாகவும் செயற்படக்கூடும்.

எனவே இவ்விடயம் தொடர்பிலான அதிகரித்த அறிவு எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படக் கூடிய சாதாரண மோதல்களையும் அதே சமயம் தேசிய மட்டத்தில் இடம்பெறுகின்ற வன்முறையுடன் கூடிய அழிவுத்தன்மை பொருந்திய மோதல்கள் பற்றியும் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதற்கு உதவக்கூடும். எனவே இங்கு மோதல் எனும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன. எல்லா மோதல்களும் ஒத்த பண்பை உடையவையாக இருப்பதில்லை. இதன் கருத்து யாதெனில் ஒவ்வொரு மோதலும் தனக்கே உரிய தனித்தன்மைகளைக் கொண்டிருக்கும். எனவே இக்கைநூலில் வழங்கப்பட்டிருக்கின்ற விடயங்கள் பொதுவாக மோதல்களின் அடிப்படைகளை ஆராய்வதுடன் தனித்தன்மை வாய்ந்த மோதல்களை விளங்கிக் கொள்வதற்கான அடிப்படைகளையும் வழங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. முரண்பாடும் மோதலும்

*கொன்ப்லிக்ட்* (conflict) என்ற ஆங்கிலப் பதம் முரண்பாடு எனவும் *கொன்ப்லிக்ட் ரெசலூசன்* (Conflict resolution) என்பது முரண்பாட்டுத் தீர்வு எனவும் பொதுவாகத் தமிழில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பதப் பிரயோகத்தில் அடிப்படையான ஒரு தவறு காணப்படுகின்றது. அதாவது முரண்பாடு என்கின்ற தமிழ்பதம் *கொன்ப்லிக்ட்* என்கின்ற ஆங்கிலப்பதத்தின் கருத்தை சரிவரப் பிரதிபலிப்பதில்லை. மோதல் தீர்வியலுடன் தொடர்புடைய பல்வேறு எண்ணக்கருக்களையும் மொழி பெயர்க்கின்ற பொழுது சரியான அதே கருத்தை வெளிப்படுத்துகின்ற தமிழ்ப்பதங்களைப் பயன்படுத்துவது சற்றுக் கடினமானதே.

ஆயினும் *கொன்ப்லிக்ட்* என்பதை சரியாக அர்த்தப்படுத்தக்கூடிய "மோதல்" என்கின்ற பதம் இருக்கும் நிலையில் முரண்பாடு என்பது பயன்படுத்தப்பட்டு வருவது தவறானது எனக் கருதப்படலாம். ஏனெனில் மோதல் என்பதும் முரண்பாடு என்பதும் இரு வேறுபட்ட விடயங்களாகும். முரண்பாடு என்பது ஒப்பீட்டளவில் மென்மையான ஒரு விடயம் என்பதுடன் அது மோதலாக இருக்க வேண்டும் என்கின்ற அவசியமில்லை. உதாரணமாக ஒரு ஆலோசனைச்சபைக் கூட்டத்தில் இரு உறுப்பினர்கள் குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றி வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பார்களேயாயின் அது "முரண்பாடு" எனப்படலாம். ஆனால் அதே உறுப்பினர்கள் தமது கருத்துக்களை நியாயப்படுத்துவதற்காக தீவிர வாதப்பிரதிவாதங்களிலோ அல்லது கைகலப்பிலோ ஈடுபடுவார்களேயானால் அது "மோதல்" ஆகும்.

முரண்பாடுகள் மோதல்களாக மாற்றமுறக்கூடும் என்பதனால் அவை மோதல்களின் ஆரம்பம் எனக் கருதப்படலாம். அதேசமயம் அவை மோதல்களாக மாற்றமடையாமல் இருப்பதற்கும் சந்தர்ப்பம் உண்டு. எனவே மோதல் என்பதும் முரண்பாடு என்பதும் ஒரே அர்த்தத்தை உடையவை அல்ல. அதாவது முரண்பாடு *கொன்ட்ரடிக்சன்* (contradiction) என்பதைச் சரியாக அர்த்தப்படுத்துகின்றதே அன்றி *கொன்ப்லிக்ட்* என்பதை அல்ல. எனவே இந்நூலில் *கொன்ப்லிக்ட்* என்பது மோதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் *கொன்ப்லிக்ட் ரெசலூசன்* என்பது மோதல் தீர்வு அல்லது மோதல் தீர்வியல் எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 4. பயன்மிகு மோதல்?

மோதல் ஆக்கக்கேடான ஒரு சமூக செயற்பாடு, அது பாதகமானது எனும் எண்ணம் பலரிடையே காணப்படலாம். இதற்கான பிரதானமான காரணம் நாம் எதிர்நோக்குகின்ற பல மோதல்கள் தீங்கு விளைவிப்பவையாகவும், அழிவுத்தன்மை வாய்ந்தவையாகவும் இருப்பதாகும். குறிப்பாக தேசிய மட்டத்தில் இடம்பெறுகின்ற, சாதாரண மக்களின் நாளாந்த வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மோதல் ஒன்று பேரழிவுத் தன்மை பொருந்தியதாகவும், பாதகமான விளைவுகளைக் கொண்டுவருவதாகவும் இருக்கின்ற பின்னணியில் பெரும்பாலானோர் மோதல்கள் பாதகமானவை, அவை தடுக்கப்பட வேண்டும் எனக் கருதுவது வியப்பிற்குரியதல்ல.

ஆயினும் மோதல்கள் நிச்சயமாகப் பாதகமானவையாகவே இருக்க வேண்டுமென்ற நிபந்தனைகள் எதுவுமில்லை. ஏனெனில் மோதல்களுக்கு சாதகமான, பயன்மிக்க பண்புகளும் இருக்கவே செய்கின்றன.

ஒரு சமூகம் வளர்ச்சியடைய வேண்டுமாயின் அது மாற்றமுற வேண்டும். மாற்றமடையாத சமூகங்கள் தேக்கமடைந்தவையாகவும், வளர்ச்சி குன்றியவையாகவும் இருந்துவிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஒரு சமூகம் வளர்ச்சியடைவதற்கு அங்கு ஆகக்குறைந்தது எண்ணங்களுக்கிடையிலான மோதல்களாயினும் இருப்பது அவசியம். இதன் காரணமாகவே கருத்து வெளியிடும் சுதந்திரம் சிறப்பாகச் செயற்படுகின்ற சமூகங்கள் பல முன்னேற்றகரமானவையாக அபிவிருத்தி அடைந்துள்ளன. எனவே சமூக அபிவிருத்திக்குத் தேவையான மாற்றங்களை உந்துகின்ற சக்தியாக மோதல்கள் செயற்படுகின்றன என்பதில் சந்தேகமில்லை.

நாம் உலக வரலாற்றை எடுத்து நோக்குவோமாயின் மோதல்களின் காரணமாக பயன்மிக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளமை புரிந்து கொள்ளப்படலாம். உதாரணமாக இன்று மேன்மையானவையாக மதிக்கப்படுகின்ற ஜனநாயகம், சமத்துவம் போன்ற கோட்பாடுகள் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்களின் விளைவுகளே ஆகும். பிரித்தானியருக்கும், அமெரிக்கர்களுக்கும் இடையிலான மோதலின் காரணமாகவே உலகின் மிகப்பெரும் சுதந்திர ஜனநாயக நாடுகளில் ஒன்றாகிய ஐக்கிய அமெரிக்கா தோற்றம் பெற்றது. இது சமூக நீதி என்பதுடன் பெருமளவு தொடர்புடையது. நசுக்கப்படுகின்ற அல்லது சுரண்டப்படுகின்ற ஒரு நபர் அல்லது குழு மோதல் தவறானது எனக்கருதி தொடர்ந்தும் அடிபணிந்திருந்தால் நீதி நிலைநாட்டப்படுவது எப்படி? காந்தி வன்முறை தவறானது எனக்கருதியதற்கு பதிலாக மோதல் தவறானது எனக்கருதி இருந்தால் இந்தியா அடிமைத்தளையிலிருந்து மீண்டிருக்க முடியுமா? எனவே மோதல் சமூக நீதியை நிலைநாட்டும் ஒரு கருவியாகவும் செயற்பட்டுள்ளது என்பது வரலாற்று ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் போல்பேர்க் (Folberg, 1993) போன்றோர் மோதலும் ஒரு உறவே என வாதிடுகின்றனர். மோதல் இடம் பெறுகின்ற பொழுது மோதலில் ஈடுபட்டுள்ளோருக்கிடையில் ஒருவித உறவு காணப்படுகின்றதே அன்றி உறவு அற்ற நிலை காணப்படவில்லை என போல்பேர்க் போன்றோர் கருதுகின்றனர். இதுவும் சாதகமான அம்சமாகக் கருதப்படவேண்டுமென்பது இவர்களின் கருத்தாகும். ஆயினும் மோதலில் ஏற்படுகின்ற உறவு சாதாரணமான உறவு அன்றி விசேடமான ஒரு உறவு என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

அத்துடன் மோதலில் ஈடுபடுகின்ற போது மனிதர்கள் படைப்பாற்றல் உள்ளவர்களாகவும் மாற்றமடைகின்றார்கள் எனவும் கருதப்படுகின்றது. மோதற்தரப்பினர் தமது இலக்கை அடைந்துகொள்ளும் நோக்கில் புதிய சிந்தனைகளில் ஈடுபடுவதுடன் செயற்திறன்மிக்க நடத்தையிலும் ஈடுபடுகின்றனர் எனக் கருதப்படுகின்றது. இச்சிந்தனைகளும், படைப்பாற்றலும் ஆக்கபூர்வமான முறையில் கையாளப்படுமாயின் பயன்மிக்கவையாக அமையக்கூடுமென போல்பேர்க் (1993) போன்றோர் கருதுகின்றனர்.

மோதல்கள் இடம்பெறுகின்ற பொழுது அதனுடன் இணைந்த வகையில் கலந்துரையாடல்கள் அல்லது பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கான சாத்தியம் பெருமளவிற்கு உண்டு. மோதல்கள் இடம்பெறுகின்ற போது மோதற்தரப்பினர் எதிர் தரப்புடனும், குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதற் சூழலில் உள்ள ஏனைய நபர்களுடனும். அல்லது குழுக்களுடனும் கலந்துரையாடல்களிலும். பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுகின்றனர். இது அதிகரித்த கருத்துப் பரிமாற்றத்திற்கு வழி ஏற்படுத்துகின்றது. எனவே மோதலில் ஈடுபட்டுள்ளவர்கள் எப்பொழுதும் ஆக்கக்கேடான செயற்பாடுகளை மட்டுமே முன்னெடுக்கின்றனர் எனக்கூறமுடியாது. எனவே ஆக்கக்கேடான அதேசமயம் ஆக்கபூர்வமான நடத்தைகள் கலந்த வகையிலேயே மோதல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன (Galtung, 1996).

அவ்வகையில் மோதல்களில் பயனுடைய விளைவுகளும் ஏற்படவே செய்கின்றன என்பது தெளிவானது. அதேசமயம் பல மோதல்கள் அழிவுத்தன்மை உடையவையாகவே உள்ளன. எனவேதான் சிமெல் (Simmel) போன்றவர்கள் மோதல்கள் சாதகமான அதேசமயம் பாதகமான பண்புகளைக் கொண்டுள்ள சமூக செயற்பாடுகள் என வாதிட்டுள்ளனர் (Abraham, 1982). அவ்விதம் நோக்குகையில் மோதல்கள் சாதகமானவை என்றோ அல்லது பாதகமானவை என்றோ இலகுவாக வகைப்படுத்தி விடமுடியாது. குறிப்பிட்ட ஒரு மோதல் எவ்விதம் முன்னெடுக்கப்படுகின்றது என்பதைப் பொருத்தே அது சாதகமானதா அல்லது பாதகமானதா என்பது அடையாளங் காணப்படலாம்.

## 5. மோதல் என்பது யாது?

கல்வியியல் ரீதியாக ஒரு எண்ணக்கருவை விளங்கிக் கொள்வதற்கான இலகுவான வழி அது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களை ஆராய்வதாகும். எல்லா வரைவிலக்கணங்களும் எல்லா எண்ணக்கருக்களையும் சரியாகவும், தெளிவாகவும் விளக்கிவிடுவதில்லை. இதனால் ஏற்படக்கூடிய குறைபாட்டை நிவர்த்தி செய்வதில் ஒன்றிற்கு மேற்பட்ட வரைவிலக்கணங்களை அவதானிப்பது உதவக்கூடும். அவ்வகையில் மோதல் எனும் எண்ணக்கருவை விளக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் சிலவற்றை நோக்கலாம். கோசர் (1956) மோதலைப் பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்துகின்றார் ;

> "தமது எதிரிகளை மட்டுப்படுத்துவதை, காயப்படுத்துவதை அல்லது அழிப்பதை இலக்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட விழுமியங்கள் மற்றும் பற்றாக்குறையான அந்தஸ்து, அதிகாரம், மற்றும் வளங்களுக்கான போராட்டம்.''

கோசரின் வரைவிலக்கணத்தின் முக்கியமான அம்சங்களை எடுத்துக் கொள்வோமாயின் முதலில் மோதல் என்பது விழுமியங்கள் மற்றும் பற்றாக்குறையான அந்தஸ்து, அதிகாரம், வளங்கள் என்பவற்றுக்கான போராட்டம் என அவர் கருதுகின்றார். விழுமியங்கள் என்பது பெருமளவிற்கு உளவியல் சார்ந்த ஒரு விடயம் ஆகும். சுருக்கமாகக் கூறினால் விழுமியங்கள் மனிதனின் நம்பிக்கைகள் எனப்படலாம். மதம் மற்றும் ஜனநாயகம், கம்யூனிசம் போன்ற அரசியல் கோட்பாடுகள், இன ரீதியான ஒருமைப்பாடு போன்ற அடிப்படையில் உளவியற் பண்புகளைக் கொண்ட நோக்கங்களுக்காகவும் மோதல்கள் இடம்பெறலாம்.

அதே சமயம் அந்தஸ்து, அதிகாரம், வளங்கள் போன்றவற்றிற்காகவும் மோதல்கள் இடம்பெறலாம். ஆனால் இவை பற்றாக்குறையானவையாக இருக்கின்ற போது மட்டுமே அவற்றை அடைந்து கொள்ளும் நோக்கில் போராட்டம் இடம் பெறக்கூடும். மேலும் கோசர் மோதலை வரைவிலக்கணப்படுத்துகின்ற போது ''போராட்டம்'' என்கின்ற பதத்தைப் பயன்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. போராட்டம் என்பது ஒப்பீட்டளவில் கூடுதல் வலுப் பொருந்திய ஒரு செயல்முறையாகும். போராட்டம் என்பது நிச்சயமாக மென்மையான ஒரு விடயமல்ல.

மேலும் ஒரு மோதலில் எதிரிகளின் இலக்கு அடுத்த தரப்பை நோக்கியதாக இருக்கும் எனக் கோசர் கருதுகின்றார். அதாவது மோதற் தரப்பினரின் நோக்கம் அடுத்த தரப்பை அழிப்பது, அல்லது காயப்படுத்துவது அல்லது மட்டுப்படுத்துவதே என இவர் கருதுகின்றார். இதுவும் முக்கியமானது. ஏனெனில் பல ஆய்வாளர்கள் மோதலில் எதிர்த் தரப்பினரின் பிரதான நோக்கம் தமது இலக்குகளை அடைந்து கொள்வதே எனக்கருதியுள்ளனர். எனினும் இலக்கு கட்டாயமாக எதிரியை அழிப்பதாக அல்லது காயப்படுத்துவதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. உதாரணமாக ரோஸ் ஸ்டாக்னர் (Ross Stagner, 1967) மோதலை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் தம்மில் ஒருவரால் மட்டுமே அன்றி இருவராலும் அடையப்பட முடியாது எனக்கருதுகின்ற இலக்குகளை அடைய விரும்புகின்ற சூழமைவே மோதல்."

இங்கு ஸ்டாக்னர் அடிப்படையில் மோதல் என்பது மனிதர்களுக்கிடையிலான ஒரு செயற்பாடு எனக்கருதுவது முக்கியமானது. இவ்வரைவிலக்கணத்தின்படி இரண்டு குரங்குக்கூட்டங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற சண்டை அல்லது சில கிராமப்பகுதிகளில் தொடர்ச்சியாக இடம் பெறுகின்ற கிராமவாசிகளுக்கும் யானைகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் மோதல்களாகக் கருதப்பட மாட்டாது. ஏனெனில் மோதல் என்பது அடிப்படையில் மனிதர்களுக்கிடையில் இடம் பெறுகின்ற ஒன்றாகும்.

மேலும் ஸ்டாக்னர் இலக்குகள் பற்றி விபரிக்கையில் இருவராலும் அடையப்பட முடியாது எனக்கருதுகின்ற இலக்குகளை அடையவிரும்பும் சூழமைவு எனக் கூறுகின்றார். இங்கு "கருதுகின்ற" என்பது முக்கியமானது. ஏனெனில் இருவராலும் அடையப்படமுடியாத இலக்கு என்பது கருதப்படுவதாகவும் இருக்கலாம் அல்லது உண்மையானதாகவும் இருக்கலாம்.

பல சந்தர்ப்பங்களில் இருவராலும் அடையப்பட முடியாத இலக்கு அதாவது ஒவ்வாத இலக்கு உண்மையானதாக இருக்கும். உதாரணமாக வீட்டில் ஒரு பேனா மட்டுமே காணப்படுகின்ற நிலையில் ஒரு சகோதரனும் சகோதரியும் அப்பேனையை அடைந்துகொள்ள முற்படுவார்களேயானால் அங்கு ஒவ்வாத இலக்கு என்பது உண்மையானது. அதேசமயம் ஒவ்வாத இலக்கு என்பது உண்மையானதாகவன்றி வெறுமனே கருதப்பட்டதாகவும் இருக்கலாம். உதாரணமாக ஒரு சகோதரனும் சகோதரியும் வீட்டில் உள்ள ஒரே ஒரு தோடம்பழத்திற்காகச் சண்டையிட்டுக் கொள்வார்களேயானால் இங்கு ஒவ்வாத இலக்கு உண்மையானது என்று அவர்கள் கருதக்கூடும். அதாவது தோடம்பழம் அவர்கள் ஒருவரால் மட்டும் அன்றி இருவராலும் அடையப்பட முடியாது என அவர்கள் கருதக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதலில் ஈடுபடுகின்ற தரப்பினர் உணர்வுபூர்வமாக மோதல்களில் பங்கு பற்றுவதனால் பொதுவாக மோதலைச் சுற்றியிருக்கும் ஏனைய யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளவோ அன்றி மோதலின் ஏனைய பரிமாணங்களை அடையாளம் காணவோ கூடிய இயலுமையை இழந்து விடுகின்றனர். இத்தகைய நிலையிலேயே மோதலைச் சுமூகமாகத் தீர்த்துக்கொள்வதற்கு மூன்றாந்தரப்பு ஒன்றின் உதவி தேவைப்படக்கூடும். நாம் இங்கு உதாரணமாக எடுத்துக்கொண்ட தோடம்பழத்திற்கான மோதலில் தாயார் ஒரு மூன்றாந்தரப்பாக தலையிடுகின்றார் என்று எடுத்துக்கொள்வோம். தாயாரின் உதவியுடன் சகோதரனும் சகோதரியும் ஏன் தோடம்பழத்திற்காகச் சண்டையிடுகின்றனர் என ஆராய்கையில், சகோதரனுக்கு வேண்டியது தோடம்பழச்சாறு எனவும், பாடசாலையில் முடிக்க வேண்டிய ஒப்படை ஒன்றிற்காக சகோதரிக்கு வேண்டியது தோடம்பழ விதைகள் எனவும் உணர்ந்து கொள்கின்றார்கள் என்று எடுத்துக்கொள்வோம்.

இந்நிலையில் ஒவ்வாத இலக்கு என்பது உண்மையானது அல்ல, மாறாக அது கருதப்பட்டதே ஆகும். ஏனெனில் தோடம்பழ விதையையும் சாற்றையும் அவர்கள் ஒரே நேரத்தில் அடைந்து கொள்ளமுடியும். எனவே கருதப்பட்ட ஒவ்வாத இலக்கு என்பது தப்பபிப்பிராயங்களில் இருந்து தோற்றம் பெறுவதாகும். மோதல் தீர்வு என்ற கோணத்திலிருந்து சிந்திப்போமானால் உண்மையில் ஒவ்வாத இலக்குகளைக் கொண்ட மோதல்கள் தீர்ப்பதற்குக் கடினமானவை என்றும் கருதப்பட்ட ஒவ்வாத இலக்குகளைக் கொண்ட மோதல்கள் தீர்க்கப்படுவது ஒப்பீட்டளவில் இலகுவானது எனவும் கூறப்படலாம்.

எவ்வாறாயினும் இங்கு முக்கியமானது யாதெனில் மோதல் ஒன்றில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் இலக்குகள் உண்மையானவையாகவோ அல்லது கருதப்பட்டவையாகவோ இருக்கலாம். இந்நிலையில் ஸ்டாக்னர் உண்மையான ஒவ்வாத இலக்குகளுக்கு போதிய அழுத்தம் கொடாதிருந்தமை அவரது வரைவிலக்கணத்தின் ஒரு குறைபாடாகக் கருதப்படலாம். இக்குறைப்பாட்டை நிவர்த்தி செய்வதாக பிசர் (Fisher et al, 2000) என்பவரதும் அவரது சகாக்களதும் வரைவிலக்கணம் அமைந்துள்ளது. இவர்களது கருத்துப்படி ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> "தம்மிடையே ஒவ்வாத இலக்குகளைக் கொண்ட அல்லது அவ்விதம் கருதுகின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினரிடையேயான உறவே மோதல்" ஆகும்.

இங்கு பிசரும் அவரது சகாக்களும் மோதலை தரப்பினரிடையேயான உறவு என வர்ணிப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போன்று மோதல் உறவு நாம் சாதாரண அர்த்தத்தில் பயன்படுத்துகின்ற உறவு அல்ல அது விசேடமான ஒரு உறவு ஆகும். எவ்வாறாயினும் மேலே ஆராயப்பட்ட வரைவிலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் மோதல் என்பதைப் பின்வருமாறு எளிமையாக விபரிக்கலாம்;

> தம்மிடையே ஒவ்வாத இலக்குகளைக் கொண்ட அல்லது அவ்விதம் கருதுகின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அல்லது குழுக்கள் தமது இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் செயற்படுவது மோதல் ஆகும்.

இங்கு நாம் இரண்டு மேலதிக விடயங்களைச் சேர்த்துக் கொண்டுள்ளோம். முதலாவது, மோதல்களில் ஈடுபடுவோர் தனி நபர்களாகவோ அல்லது குழுக்களாகவோ இருக்க முடியும். இவர்களை நாம் பொதுவாக மோதற் தரப்பினர் என அழைப்பதுண்டு. இரண்டாவது செயற்பாடு, ஒவ்வாத இலக்குகள் மட்டும் மோதல் ஆகிவிடாது. மாறாக மோதற் தரப்பினர் தமது இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் செயற்படுகின்ற போது மட்டுமே மோதற் சூழமைவு ஏற்படுகின்றது. ஒவ்வாத இலக்குகளின் இருப்பு மோதலின் ஆரம்பக் கட்டமாக மட்டுமே இருக்க முடியும்.

## 6. மோதல் மூலக்கூறுகள்

மோதல் என்பது யாது என்பதை விளங்கிக் கொள்வதற்கான இலகுவான இன்னுமோர் வழி அதன் மூலக்கூறுகளை அடையாளம் காண்பதாகும். அவ்வகையில் மோதல் ஒன்றில் பிரதானமான மூன்று மூலக்கூறுகள் காணப்படுகின்றன (Galtung, 1969: Mitchell, 1981). அவையாவன ;




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மோதற் சூழமைவு (Conflict situation)

2. மோதல் உளப்பாங்கு (Conflict attitude)

3. மோதல் நடத்தை (Conflict behavior)




மோதலின் இம்மூன்று பரிமாணங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை மட்டும் அன்றி சிக்கலான முறையில் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டவையுமாகும். அத்துடன் இம்மூன்று மூலக்கூறுகளும் ஒன்றாக அமைந்திருக்கின்ற பட்சத்தில் மோதல் தெளிவானதாகவும், ஒப்பீட்டளவில் தீவிரமானதாகவும் காணப்படும். இனி நாம் மோதல் மூலக்கூறுகளை தனித்தனியே ஆராயலாம்.

## 6.1 மோதல் சூழமைவு:

இது அடிப்படையில் ஒவ்வாத இலக்குகளையே குறித்து நிற்கின்றது. அதாவது மோதல் ஒன்று தோற்றம் பெறுவதற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்கள் அல்லது குழுக்களிடையே ஒரே நேரத்தில் அடையப்பட முடியாத இலக்குகள் காணப்பட வேண்டும். நாம் ஏற்கனவே அவதானித்தது போன்று ஒவ்வாத இலக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையானவையாகவோ அல்லது கருதப்பட்டவையாகவோ இருக்க முடியும். இலக்கு என்பது உண்மையில் ஒரு மோதல் தரப்பினால் எதிர்காலத்தில் அடைந்துகொள்ள விரும்பப்படுகின்ற பொருளாகவோ, குறிப்பிட்ட பிரச்சனைக்கான தீர்வாகவோ அல்லது சமூக நிலையாகவோ இருக்க முடியும். மோதல் இலக்குகள் மூன்று வகையாகப் பிரிக்கப்படலாம்;

(i) வளங்கள்

(ii) விழுமியங்கள்

(iii) உறவுகள்

வளங்களுக்கான மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணம் இவ்வளங்களின் பற்றாக்குறையாகும். போதியளவில் காணப்படுகின்ற வளங்களுக்காக அல்லது பொருட்களுக்காக மனிதர்கள் போட்டியிடுவதில்லை. இவை பற்றாக்குறையாக இருக்கின்ற போது அதாவது ஒரே நேரத்தில் மோதற் தரப்பினரால் அடையப்பட முடியாததாக இருக்கின்ற போது மனிதர்கள் அவற்றை அடைந்து கொள்வதற்காகப் போட்டியிடுகின்றனர். இது மோதலிற்கான அடிப்படையை ஏற்படுத்தி விடுகின்றது. பற்றாக்குறையான வளங்களுக்கு உதாரணங்களாக எண்ணெய், தண்ணீர், உணவு, நிலம், பணம், பதவி, போன்றவை கூறப்படலாம். இவற்றிற்காக தனி மனிதர்கள் மட்டுமன்றி அரசுகளும் கூட மோதலில் ஈடுபடுவதை அனுபவரீதியாகக் கண்டுகொள்ளலாம்.

விழுமியங்கள் என்பவை அடிப்படையில் மனித நம்பிக்கைகளாகும். தமது நம்பிக்கைகளை ஏனையவர்கள் மீது திணிப்பதற்கான முயற்சிகளின் போது அல்லது தமது நம்பிக்கைகளுக்கு எதிராக ஏனையவர்கள் நடந்து கொள்ளாதிருப்பதை உத்தரவாதப்படுத்துவதற்கான முயற்சிகளின் போது விழுமியங்களின் அடிப்படையிலான மோதல்கள் ஏற்படுகின்றன. விழுமியங்கள் என்பவை ஜனநாயகம், சோசலிசம் போன்ற அரசியல் கோட்பாடுகளாகவோ அல்லது மத ரீதியானவையாகவோ அல்லது கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கைகளாகவோ இருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் அன்பு, பாசம், பரிவு போன்ற உறவு ரீதியான காரணிகளின் அடிப்படையிலும் மோதல்கள் இடம் பெறுவதுண்டு.

மோதல் இலக்குகள் நேர்நிலை இலக்குகள், எதிர்நிலை இலக்குகள் எனவும் வேறுபடுத்தி அடையாளம் காணப்படுகின்றன. ஒரு மோதற் தரப்பு உணவுப்பண்டம் அல்லது பதவி போன்ற ஒரு இலக்கை அடைந்து கொள்ள முற்படுவது நேர்நிலை இலக்கு எனப்படுகின்றது. அதே சமயம் எதிர்நிலை இலக்கு என்பது மோதற் தரப்பு ஒன்று நட்டம் போன்ற ஒரு நிலையை தவிர்க்க முற்படுவதைக் குறிக்கின்றது. அத்துடன் இது பதவி போன்ற குறிப்பிட்ட ஒரு விடயத்தை எதிர்தரப்பு அடைந்து கொள்வதை தடுக்க முற்படுவதையும் குறித்து நிற்கின்றது.

## 6.2 மோதல் உளப்பாங்கு:

மோதலுடன் இணைந்த வகையில் மோதற் தரப்பினரிடையே உளரீதியான செயற்பாடு ஒன்று இடம்பெறுகின்றது. இவ் உளரீதியான செயற்பாடு பொதுவாக மோதலைத் தீவிரப்படுத்துகின்ற ஒரு காரணியாக செயற்படுகின்ற அதே சமயம் அது மோதலுக்கான காரணியாக செயற்படுவதற்கான சாத்தியமும் உண்டு. ஒரு தீவிரப்படுத்தும் காரணி என்கின்ற வகையில் எதிரியைப் பற்றிய இழிவான அபிப்பிராயங்களை கட்டி எழுப்புதல், மோதலில் ஈடுபட்டுள்ள எதிர்க்குழு பற்றிய மாறா உருநிலைப்படிவுகளைத் (Stereotypes) தோற்றுவித்தல் போன்றவை இவ் உளவியற் செயற்பாட்டின் விளைவுகளாகும். மாறா உருநிலைப்படிவுகள் பொதுவாக எதிர்குழுவை இழிவுபடுத்துவதாகவும் அவர்களை மனிதர்களிலும் சற்றுக் குறைவான அல்லது மிருக குணம் கொண்டவர்களாகப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் அமைந்திருக்கும்.

அவ்வகையில் எமது சமூகத்திலும் கூட இனமோதலுடன் தொடர்புபட்ட வகையில் எதிர்குழு பற்றிய உளநிலை உருமாதிரிகள் (Images) பல காணப்படுகின்றன. உதாரணமாக எதிர்த்தரப்பினர் சோம்பேறிகள், சுத்தமற்றவர்கள், கொடூரமான செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் போன்ற பல உளநிலை உருமாதிரிகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாரஸ்யமானது யாதெனில் எல்லா குழுவினரும் தமது எதிர்குழு பற்றிய இதேவிதமான உளநிலை உருமாதிரிகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகும்.

இவற்றிற்குப் புறம்பாக எதிர்குழு பற்றிய அச்சம், சந்தேகம், நம்பிக்கையின்மை, வெறுப்பு போன்றவையும் மோதல் உளப்பாங்கின் பண்புகளாகும். மேற்கூறியவை யாவும் எதிர்குழு பற்றிய உளவியல் செயன்முறையாக அமைந்திருக்கின்ற அதே சமயம் தன்குழு பற்றிய செயற்பாடு ஒன்றும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. தன்குழு பற்றிய மேலாதிக்க உணர்வுகள், குழு ஒருமைப்பாட்டு உணர்வு போன்றவை தன்குழு பற்றிய உளவியல் செயற்பாடுகளாகும். எனினும் மிகப் பொதுவான தன்குழு பற்றிய உளப்பாங்கு "பாதிக்கப்பட்டோர்" மனோபாவமாகும். மோதலில் ஈடுபட்டுள்ள எல்லா குழுக்களும் தன் குழுவைப் பாதிக்கப்பட்ட குழுவாகக் கருதுவதுண்டு. இப் பாதிக்கப்பட்டோர் மனோபாவம் குறிப்பாக வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

மோதல் உளப்பாங்கு தொடர்பில் முக்கியமான இன்னுமோர் விடயம் தெரிவுசெய்யப்பட்ட தகவற் சேகரிப்பு ஆகும். பொதுவாக மோதற் தரப்பினர் தமக்கு வழங்கப்படுகின்ற எல்லாத் தகவல்களையும் அவ்விதமே உள்வாங்கிக் கொள்வதில்லை. மாறாக ஏற்கனவே இருக்கின்ற நம்பிக்கைகளையும் குறிப்பாகத் தன்குழு, எதிர்குழு உணர்வுகளையும் உறுதிசெய்கின்ற தகவல்களை மட்டுமே மோதற் தரப்பினர் உள்வாங்கிக்கொள்கின்றனர். ஏனைய தகவல்கள் யாவும் உள்நோக்கமுடைய பிரச்சாரம் என நிராகரிக்கப்படுகின்றன. இத்தகைய தெரிவு செய்யப்பட்ட தகவல் சேகரிப்பு அல்லது உள்வாங்கல் மறுவலமாக விரோதத்தை அதிகரிக்கவும், மோதலைத் தீவிரப்படுத்தவும் உதவுகின்றது.

## 6.3 மோதல் நடத்தை:

இது அடிப்படையில் தமது இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்கில் அல்லது எதிர்த்தரப்பு தனது இலக்கை கைவிடச் செய்வதை அல்லது மாற்றிக்கொள்வதை நிர்ப்பந்திப்பதற்காக மோதற் தரப்பினரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளைக் குறிக்கின்றது. மோதல் தரப்பினர் மேற்கூறிய நோக்கங்களின் அடிப்படையில் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போது மோதல் வெளிப்படையானதாகவும், ஒப்பீட்டளவில் தீவிரமானதாகவும் மாற்றமடைகின்றது. ஆயினும் முக்கியமானது யாதெனில் எல்லா மோதல் நடத்தைகளும் வன்முறை ரீதியானவையாக இருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனை எதுவும் கிடையாது என்பதாகும். மோதற் சூழமைவு ஒன்றில் தமது இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்கில் முன்னெடுக்கப்படுகின்ற எல்லா நடவடிக்கைகளும் மோதல் நடத்தைகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மோதல் நடத்தைகள் மென்மையான ஒரு மட்டத்தில் வாதப்பிரதிவாதங்கள், பயமுறுத்தல்கள், வாக்குறுதிகள் போன்ற செயற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. தீவிரமான ஒரு மட்டத்தில் நேரடி வன்முறை, தற்கொலைத் தாக்குதல்கள் போன்றவை மோதல் நடத்தைகளாகக் கொள்ளப்படலாம்.

## 7. மோதல் காரணிகள்

தேசிய மட்டத்திலாயினும் சரி சர்வதேச மட்டத்திலாயினும் சரி இடம்பெறுகின்ற ஒவ்வொரு மோதலும் தனக்கே உரிய தனித்துவமான பண்புகளைக் கொண்டிருக்கும் என்ற வகையில் சிறப்பான காரணிகள் அம்மோதலின் பின்னணியில் செயற்பட்டிருக்கும். எனினும் இக்காரணிகளில் பொதுவான அம்சங்கள் காணப்படும். இப் பொதுப் பண்புகளைக் கொண்டமைந்த வகையில் மோதலுக்கான காரணிகளை விளக்கும் கோட்பாடுகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த சில கோட்பாடுகள் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

அவ்வகையில் ஒரு சமூகத்தின் அதிகாரக் கட்டமைப்பே மோதலுக்கான அடிப்படைக் காரணம் எனச் சிலர் கருதுகின்றனர் (Abraham,1982). இது மோதலை அடிப்படையில் அதிகாரத்துடன் தொடர்புபடுத்தி விளக்க முற்படுகின்ற ஒரு கோட்பாடு ஆகும். எந்த ஒரு சமூகமும் அல்லது நிறுவனமும் அதனை வழிநடத்திச் செல்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரக் கட்டமைப்பு ஒன்றைக் கொண்டிருக்கும். இவ் அதிகாரக் கட்டமைப்பு அதிகாரம் செலுத்துபவர்கள், அதிகாரத்திற்கு உட்படுபவர்கள் ஆகிய இரு தரப்பினர்களைக் கொண்டிருக்கின்ற நிலையில் இவ்விரு தரப்பினருக்குமிடையிலான மோதல் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது என்பது இக்கோட்பாட்டின் அடிப்படை வாதம் ஆகும். இது மோதற் காரணிகள் பற்றிய மிகப் பரந்துபட்ட வாதம் என்பதால் ஓரளவு தெளிவற்றதாகக் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் பிசரும் அவரது சகாக்களும் (Fisher et al, 2000), மோதலுக்கான குறிப்பான காரணிகள் சிலவற்றை அடையாளம் கண்டுள்ளனர் அவையாவன ;

(i) சமூக உறவுகள்

(ii) ஒவ்வா நிலைப்பாடுகள்

(iii) மனிதத் தேவைகள்

(iv) அடையாள உணர்வுகள்

(v) கலாச்சாரங்களுக்கிடையிலான தவறான தொடர்பாடல்

(vi) சமூக அநீதி

மோதலும் ஒரு வகையான உறவே என நாம் முன்னரே அறிந்துள்ளோம். சமூக உறவுகள் தவிர்க்க முடியாதபடி மோதலுக்கும் வழி சமைப்பனவாக உள்ளன. வேறுபட்ட நபர்கள், குழுக்கள் என்பனவற்றிற்கிடையிலான பிளவுகள், நம்பிக்கையீனங்கள், குரோத உணர்வுகள் போன்றவை இவர்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தி விடுவதாகச் *சமூக உறவுக் கோட்பாடு* கருதுகின்றது.

அதேசமயம், நாம் ஒவ்வாத இலக்குகள் அல்லது நிலைப்பாடுகளே மோதல்களைத் தோற்றுவிக்கின்றன எனவும் கூறியுள்ளோம். *விதிமுறை பேச்சுவார்த்தைக் கோட்பாட்டின்* படி மோதலில் ஈடுபடுகின்ற தரப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது இலக்குகளை முழுமையாக அடைய முற்படுகின்ற அதே சமயம் எதிர்த்தரப்பை பூரணமாகத் தோல்வியடையச் செய்ய முற்படுவதனால் மோதல்கள் ஏற்படுகின்றன.

மோதல்களுக்கான காரணங்களை விளக்குவதில் *மனிதத் தேவைகள் கோட்பாடு* பாரிய ஒரு பங்களிப்பைச் செய்துள்ளது. மனிதர்களுக்கு மிக அடிப்படையான சமூக, உடலியல், மற்றும் உளவியல் ரீதியான தேவைகள் காணப்படுகின்றன. இத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஏற்படுகின்ற விரக்தியின் காரணமாகவே மோதல்கள் ஏற்படுகின்றன என்பது இக்கோட்பாட்டின் அடிப்படையாகும்.

குறிப்பாக சமூக மோதல்களை விளக்குவதில் அடையாளக் கோட்பாடு முக்கியமானது. மனிதர்கள் பொதுவாகப் பல மட்டங்களிலான அடையாளங்களைக் கொண்டிருப்பார்கள். உதாரணமாக ஒருவர் ஒரு தேசத்தைச் சார்ந்தவர் எனும் அடையாளத்தைக் கொண்டிருக்கின்ற அதே சமயம் ஒரு இன அல்லது சமயக் குழுவைச் சேர்ந்தவர் என்கின்ற அடையாளத்தையும் ஒரு குறிப்பிட்ட விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர் என்கின்ற அடையாளத்தையும் கொண்டிருக்க முடியும். எனவே ஒரு நபர் ஒரே நேரத்தில் பல அடையாளங்களைக் கொண்டிருக்க முடியும். எனினும் இவற்றில் சில மிக அடிப்படையானவையாகவும் ஏனையவை பெருமளவு உறுதித்தன்மை அற்றவையாகவும் காணப்படும். குறிப்பாக இனத்துவம், மதம் ஆகியவற்றுடன் தொடர்புடைய அடையாளங்கள் அடிப்படையானவை எனக் கருதப்படுகின்றன. இவ் அடிப்படை அடையாளங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்ற போது சமூக மோதல்கள் ஏற்படுகின்றன என்பது *அடையாளக் கோட்பாட்டின்* விளக்கம் ஆகும்.

மனிதர்களுக்கிடையிலான கலாச்சார வேறுபாடுகள் மோதல்களை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான சில காரணிகள் ஆகும். ஏனெனில் வேறுபட்ட கலாச்சாரங்களுக்கிடையில் தப்பபிப்பிராயங்கள் ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இது கலாச்சாரங்களுக்கிடையிலான தொடர்பாடல் பண்பினாலும் ஏற்படக்கூடும். இதுவே *கலாச்சாரங்களுக்கிடையிலான தவறான தொடர்பாடல் கோட்பாடு* ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களில் காணப்படக்கூடிய சமத்துவமின்மை, அநீதி போன்றவையும் மோதல்களைத் தோற்றுவிக்கும் அடிப்படையான காரணிகளாகும் என்பது *மோதல் நிலைமாற்றக் கோட்பாட்டின்* விளக்கம் ஆகும். இவ் அநீதிகள் சமூக, பொருளாதார, கலாச்சாரப் பண்புகளைக் கொண்டவையாக இருக்கலாம்.

மோதல்கள் பற்றி ஆராய்கையில் குறிப்பாக இன மோதல்கள் குறித்து நோக்குவது பொறுத்தமானதாகும். ஏனெனில் இன்று இனமோதல்கள் சர்வதேச ரீதியாக மிகப்பிரதானமான மோதல் மாதிரியாக மாற்றமடைந்துள்ளன. இனமோதல்களின் அதிகரிப்பு குறிப்பாகக் கடந்த நூற்றாண்டின் அரைப்பகுதியில் இருந்து ஆரம்பித்திருந்ததுடன் 1990ம் ஆண்டின் பின் "இனமோதல்களின் வெடிப்பு" ஒன்று ஏற்பட்டிருந்தது என்று கூறக்கூடிய அளவிற்கு பெரும் அதிகரிப்பைக் கண்டிருந்தது (Gurr & Harff, 1994). எனவேதான் இன்று மோதல்கள் பற்றிய ஆய்வில் இன மோதல்கள் பிரதானமான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளன.

இன மோதல்களின் அடிப்படைக் காரணிகளாக இரு பிரதானமான அம்சங்கள் அடையாளம் காணப்படலாம்;

(i) இனப்பாகுபாடு

(ii) இருப்பு பற்றிய அச்சம்

இவற்றுள் முதலாவது அம்சத்தை எடுத்துக் கொள்வோமாயின் பெரும்பாலான இன மோதல்களில் இனப்பாகுபாடு என்கின்ற விடயம் முக்கியமான ஒரு காரணியாக அடையாளம் காணப்படுகின்றது. காலணித்துவத்தில் இருந்து விடுபட்ட புதிய நாடுகளிலேயே இன்று பெரும்பாலான இனமோதல்கள் காணப்படுகின்றன. இங்கு சுதந்திரத்தின் பின்னர் அரசியல் அதிகாரத்தைப் பொறுப்பேற்றுக் கொண்ட பெரும்பான்மையினர் இனரீதியான சிறுபான்மையினருக்கு எதிராகப் பாகுபாடான முறையில் நடந்து கொண்டமை அல்லது நடந்து கொள்வதாகக் கருதப்பட்டமை இன மோதல்களைத் தோற்றுவித்துள்ளது.

அதேசமயம் இனமோதல்களில் முக்கியமான இன்னுமோர் பரிமாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது இனக்குழுவின் நீண்டகால இருப்புப் பற்றிக் காணப்படுகின்ற அச்சம் ஆகும். இத்தகைய அச்சம் இன மோதல்களில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான எல்லா இனக்குழுக்களிடையேயும் காணப்படுகின்றது. இவ் அச்சம் பொதுவாக வரலாற்று நிகழ்வுகளினால் நிர்ணயிக்கப்படுகின்றது. அதாவது இவ் அச்சம் தமது இனத்திற்கு எதிராக எதிர் இனக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட பெரும் பாதிப்பை ஏற்படுத்திய வன்முறை நிகழ்வினால் தூண்டப்பட்டதாய் இருக்கும். தமது இனக்குழுவின் நீண்டகால இருப்புப் பற்றிய அச்சத்தைக் கொண்டுள்ள இனக்குழுக்கள் பொதுவாக எதிர் இனக்குழு குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்தில் இருந்து தம்மை முழுமையாக இல்லாதொழித்து விடுவதற்கான சதித்திட்டத்தைக் கொண்டிருப்பதாகக் கருதுவதுண்டு. இது தவிர்க்கமுடியாதபடி மோதல்களை ஏற்படுத்தி விடுகின்றது. அழிந்துவிடும் அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட இனமோதல்கள் பெரிதும் தீவிரத்தன்மை உடையனவாகவும், வன்முறைப்பண்பு உடையதாகவும் இருப்பதற்கான சாத்தியங்கள் பெரிதும் உண்டு.

## 8. மோதல் மட்டங்கள்

சமூக மோதல்கள் பல்வேறு மட்டங்களில் இடம் பெறுவதுண்டு. அவற்றைப் பின்வருமாறு அடையாளம் காணலாம்;

| |
|---|
| சர்வதேச மோதல்கள் |
| இன மோதல்கள் |
| குழு மோதல்கள் |
| நிறுவன மோதல்கள் |
| குடும்ப மோதல்கள் |
| தனிநபர் மோதல்கள் |

இங்கு மிகக் கீழ்மட்டத்தில் தனிநபர்களுக்கிடையிலான மோதல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எனினும் நுண்ணியல் மட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக மோதல்களே அதாவது மனிதர்களினுள் உளவியல் ரீதியாக இடம்பெறுகின்ற மோதல்களே காணப்படுகின்றன எனக்கருதுவோர் உளர். எனினும் உள்ளக மோதல்களுக்கும் சமூக மோதல்களுக்கும் இடையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

உதாரணமாக சமூக மோதல் ஒரு இலக்கை நோக்கமாகக் கொண்டு இரு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அல்லது குழுக்களுக்கிடையில் இடம்பெறும். அதே சமயம் உள்ளக மோதல்கள் இரு ஒவ்வாத இலக்குகள் அடிப்படையில் ஒரு நபரினுள் இடம் பெறுவதாகும். எனவே உள்ளக மோதல் சமூக மோதல்களின் வரைவிலக்கணத்தினுள் பொருந்துவதில்லை. எனவேதான் இங்கு மிகக் கீழ் மட்டத்தில் தனிநபர்களுக்கிடையிலான மோதல்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

இரண்டு தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான மோதல்கள் *தனிநபர் மோதல்கள்* எனப்படுகின்றன. ஒரு வேலிப் பிரச்சினையில் மோதிக் கொள்கின்ற இரு நபர்களை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும். குடும்ப மோதல்களும் பரந்த அளவில் இடம்பெறுபவை ஆகும். இரு குடும்பங்களுக்கிடையிலான மோதல்கள் அல்லது ஒரே குடும்பத்தினுள் இருவருக்கிடையிலான மோதல்கள், உதாரணமாகக் கணவன், மனைவிக்கிடையிலான மோதல்கள் *குடும்ப மோதல்கள்* எனப்படலாம்.

இரு கால்ப்பந்தாட்டக் குழுக்களுக்கிடையிலான மோதல் அல்லது தொழிற்சங்கத்திற்கும், நிர்வாகத்திற்குமிடையிலான மோதல்கள் *நிறுவன மோதல்கள்* எனப்படலாம்.

*குழு மோதல்களுக்கும் இன மோதலுக்குமிடையில்* பல ஒருமைப்பாடுகள் காணப்படினும் இவை இரண்டும் வெவ்வேறானவை என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். இவற்றிற்கிடையிலான முக்கியமான வேறுபாடு இன மோதல்கள் அடிப்படையில் அடையாள அம்சங்களுடன் தொடர்புபட்டதாயிருக்க, குழு மோதல்கள் அரசியல் பண்புடையவையாகவோ, இல்லாதவையாகவோ இருக்கலாம். அவ்வகையில் குழு மோதலுக்கு உதாரணமாக இரு அரசியற் கட்சிகளுக்கிடையிலான மோதல்கள் அல்லது இரு சுற்றுப்புறச்சூழல் நலன் குழுக்களுக்கிடையிலான மோதல்கள் கூறப்படலாம். அதே சமயம் இன மோதல்களுக்கு உதாரணமாக இலங்கையின் சிங்களவர் தமிழர்களுக்கிடையிலான மோதல், இஸ்ரேலிய பாலஸ்தீனர்களுக் கிடையிலான மோதல், அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டஸ்தாந்துகளுக்கும் இடையிலான மோதல் போன்றவை கூறப்படலாம். இவை உள்ளூர் மோதல்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

*சர்வதேச மோதல்கள்* வெளிப்படையாகப் புரிகின்ற வகையில் அதிஉயர் மட்டங்களிலான நாடுகளுக்கிடையிலான மோதல்கள் ஆகும். இந்தியா - பாகிஸ்தான் என்பவற்றிற்கிடையிலான மோதல்கள், ஈரான் - ஈராக் யுத்தம், அமெரிக்க - ஈராக் மோதல்கள் போன்றவை சர்வதேச மோதல்களுக்கு உதாரணமாகக் கூறப்படலாம். 1990ம் ஆண்டிற்கு முன்னர் சர்வதேச மோதல்களே பிரதானமான மோதல் மாதிரிகளாயிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மோதல் மட்டங்களுக்கிடையிலான வேறுபாடுகளைத் தக்கவகையில் விளங்கிக் கொள்வது மோதற் தீர்வியல் நோக்கில் மிகவும் முக்கியமானது. ஏனெனில் வேறுபட்ட மட்டங்களிலான மோதல்கள் வேறுபட்ட பண்புகளையுடையவையாய் இருக்கும். இப்பண்புகள் சரியாக விளங்கிக்கொள்ளப்படுகின்ற நிலையிலேயே இவற்றுக்கான தீர்வு பற்றிச் சிந்திப்பது சாத்தியமானதாய் இருக்கும். எனினும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய இன்னுமோர் முக்கிய விடயம் யாதெனில் மேலே தரப்பட்டுள்ள வேறுபாடுகள் ஆய்வு நோக்கில், வசதிக்காகவே மேற்கொள்ளப்படுகின்றனவே அன்றி நடைமுறையில் தூய நிலையில் மட்டங்களைச் சரியாக வேறுபடுத்தி விடுவது இலகுவானதன்று. ஏனெனில் ஒரு மட்டத்திலான மோதல்கள் இன்னுமோர் மட்டத்தின் பண்புகளை ஓரளவிற்குக் கொண்டிருக்கக் கூடும். உதாரணமாக இன மோதல்களில் சர்வதேச மோதல்களின் மூலக்கூறுகளும், சர்வதேச மோதல்களில் இன ரீதியான பண்புகளும் காணப்படலாம்.

## 9. மோதல்களின் வகைகள்

மோதல் வகைகள் பற்றிய கருத்தியல் வாதப்பிரதிவாதங்கள் தெளிவற்றவையாகவும் சரிவர வரையறுக்கப் படாதவையாகவும் உள்ளன. எவ்வாறாயினும், முன்வைக்கப்பட்டுள்ள எண்ணக்கருக்கள் சிலவற்றைத் தொகுத்து வழங்குவதற்கான ஒரு முயற்சியே இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வகையில் முதலாவதாக மோதல்களை (1) உள்ளார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்கள், (2) வெளிப்படையான மோதல்கள் என இரண்டாகப் பாகுபடுத்தலாம் எனச் சிலர் கருதுகின்றனர் (Fisher et al, 2000). இவர்களின் கருத்தின்படி உள்ளார்ந்த மோதல்கள் மறைமுகமானவையாகவும் சரியாக வெளிப்படுத்தப்படாதவையாகவும் காணப்படும். அதேசமயம் வெளிப்படையான மோதல்கள் வெளிப்படுத்தப்பட்டதாகவும் ஒப்பீட்டளவில் தீவிரத் தன்மையுடையதாகவும் காணப்படும். எனினும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம் யாதெனில் உள்ளார்ந்த மோதல்கள் பூர்த்தியடைந்த நிலையிலானவை எனக்கருதப்பட முடியாது. அவை மறைத்து வைக்கப்பட்டவையாக இருப்பதன் காரணமாக மோதலிற்குத் தேவையான நடத்தைகளைக் கொண்டவையாக இருக்கமாட்டா. அவ்வகையில் நோக்குகையில் உள்ளார்ந்த மோதல்கள் மோதலின் ஒரு வகை எனக்கூறப்படுவதிலும் பார்க்க மோதல் வளர்ச்சியின் ஒரு கட்டம் எனக்கூறப்படுவது பொருத்தமானது. அவ்வகையில் உள்ளார்ந்த மோதல்கள் சாதாரண மோதல்களாக வளர்ச்சியடையலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

மோர்டொன் டொச் (1973) மோதல்களை (1) ஆக்கபூர்வமான மோதல்கள் (2) ஆக்கக்கேடான மோதல்கள் என இரண்டு வகையானவையாகப் பாகுபடுத்துகின்றார். சுருக்கமாகக் கூறுவதானால் ஆக்கபூர்வமான மோதல்கள் நாம் ஏற்கனவே நோக்கியுள்ள மோதல்களின் சாதகமான பண்புகளைக் கொண்டிருக்கும். அதாவது ஆக்கபூர்வமான மோதல்கள் மோதலில் ஈடுபட்டிருந்த அனைத்துத் தரப்பினருக்கும் திருப்தியளிக்கக்கூடிய விளைவுகளைக் கொண்டிருக்கும். அதேசமயம் ஆக்கக்கேடான மோதல்கள் விரும்பத்தகாத சமூக விளைவுகளைக் கொண்டிருக்கும். அத்துடன் அதன் முடிவு மோதற்தரப்பினருக்கு திருப்தி அளிப்பதாக இல்லாதிருக்குமாகையினால் அது நீண்ட காலம் நிலைத்திருப்பதற்கான சாத்தியங்கள் அதிகமானவையாகக் காணப்படும். எனவே ஆக்கக்கேடான மோதல்கள் நீண்டகாலம் நிலைத்திருப்பதுடன் தீவிரமடைந்து செல்பவையாகவும் இருக்கும். அவ்வகையில் நீண்டகாலம் நிலைத்திருக்கின்ற இன மோதல்கள் போன்றவை ஆக்கக்கேடான மோதல்களினுள் வகைப்படுத்தப்படலாம்.

கோசர் (1956) (1) யதார்த்தமான (2) யதார்த்தமற்ற மோதல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இரு வகையான மோதல்களை அடையாளம் கண்டுள்ளார். கோசரின் கருத்தின்படி ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கான மோதல் யதார்த்தமான மோதல் எனவும், ஒரு இலக்கை அடைவதை அன்றி வேறு நோக்கங்களைக்கொண்ட மோதல்கள் யதார்த்தமற்ற மோதல்கள் எனக் கூறப்படலாம். இவை பொதுவாக எதிர்த்தரப்பை அல்லது குறிப்பிட்ட தரப்பிற்கு எதிரான நம்பிக்கைகளைக் கொண்டுள்ளவர்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும். எனவே இவை பொதுவாக தீவிரமுடையவையாகவும் அழிவுத்தன்மை வாய்ந்தவையாகவும் இருப்பதுண்டு. உதாரணமாக முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டங்கள் முதலாளித்துவத்தை அழிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பின் அவை யதார்த்தமற்ற மோதல்கள் எனக்கருதப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றது. எவ்வாறாயினும், முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டங்களிலும் கூட முதலாளித்துவத்தை அழித்து கம்யூனிச அல்லது சோசலிசச் சமூகமொன்றினை ஏற்படுத்தும் இலக்கு ஒன்று பின்னணியில் காணப்படும் என்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

அதேசமயம் மோதற் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை (1) வளங்களுக்கான மோதல் (2) பிழைத்திருப்பதற்கான மோதல் என இரு வகையானவையாக மிட்சேல் (1981) வரையறுத்துள்ளார். வளங்களுக்கான மோதல் பணம், பதவி, நிலம் போன்ற இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்ற அதே சமயம் குறிப்பிட்ட ஒரு நபரின் அல்லது குழுவின் நீண்டகால இருப்பை உத்தரவாதப்படுத்துவதற்கான மோதல்களும் காணப்படுகின்றன. இவை பிழைத்திருப்பதற்கான மோதல்கள் என அழைக்கப்படலாம். அதி தீவிரம் வாய்ந்த இனமோதல்கள் ஒரு வகையில் பிழைத்திருப்பதற்கான மோதல்கள் எனக்கூறப்படலாம்.

## 10. மோதல் செயன்முறை

மோதல் என்பது ஒரு நிகழ்வு அல்ல. அது பல அபிவிருத்திக் கட்டங்களைக் கொண்ட ஒரு செயன்முறை ஆகும். எனவே அவற்றிற்கு வாழ்க்கைச் சக்கரம் ஒன்று காணப்படுகின்றது. மோதல் செயன்முறைக்கு ஒரு வாழ்க்கைச்சக்கரம் உண்டு என்பது மோதல்களுக்குத் தொடக்கமும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவும் உண்டு என்ற கருத்தைக் கொண்டதாகும். அவ்வகையில் கெனத் போல்டிங் போன்றோர் ஒவ்வோரு மோதலுக்கும் ஓர் முடிவு உண்டு எனக் கருதுகினற அதே சமயம் டெரன்ரோப் போன்றோர் மோதல்கள் கட்டுப்படுத்தப்படவோ அல்லது ஒழுங்குபடுத்தப்படவோ கூடுமே அன்றி பூரணமாக இல்லாதொழிக்கப்பட முடியாது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

எனினும் உள்ஞர் மட்டத்திலும் சரி சர்வதேச மட்டத்திலும் சரி பல மோதல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதை நாம் அனுபவ ரீதியாக அறிந்துள்ளோம். அதே சமயம் வட அயர்லாந்து போன்ற பிரதேசங்களில் மோதல்கள் மிக நீண்ட காலம் நீடித்திருப்பதையும் காணலாம். எனவே ஒரு மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட முடியுமா இல்லையா என்பது மோதலுடன் தொடர்புடைய தரப்பினர், பிரச்சினைகள், பிராந்தியத்தில் காணப்படுகின்ற அரசியல் யதார்த்தங்கள் போன்றவற்றுடன் நெருக்கமாகத் தொடர்புபட்ட ஒரு விடயமாகும்.

எவ்வாறாயினும், எல்லா மோதல்களும் ஒரே வகையிலான செயன்முறையையோ அன்றி அபிவிருத்திக் கட்டங்களையோ கொண்டிருப்பதில்லை. அதே சமயம் அவை ஒரே சீராக முன்னேறிச் செல்வதும் இல்லை. அதாவது சில மோதல்கள் சீராக மோசமடைந்து செல்வது போல் காணப்படும், இடையில் மெதுவான ஒரு நிலைக்கு திரும்பி பின்னர் மீண்டும் மோசமான நிலைக்கு மாறிச் செல்லக்கூடும். சில மோதல்கள் தமது வாழ்க்கைச்சக்கரத்தின் எல்லாப் படிமுறைகளையும் எட்டுவதில்லை. மாறாக அவை மோதல் செயன்முறையின் ஆரம்பக் கட்டங்களிலேயே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விடலாம் அல்லது இல்லாமல் போய்விடலாம். எனவே மோதற் செயன்முறை என்ற நிச்சயமான ஒரு விளக்கததை முன்வைப்பது கடினமானது. எனினும் மோதல் செயன்முறை பற்றிய பொதுவான விளக்கம் ஒன்றை வழங்கும் நோக்கில் பின்வரும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில் மோதல் செயன்முறையின் அபிவிருத்திக் கட்டங்கள் பின்வருமாறு அடையாளம் காணப்படலாம் (Fisher et al, 2000; Glasl, 1999; Mitchell, 1981).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




***தோற்றம்:*** மோதற் தரப்பினரால் ஒவ்வாத இலக்குகள் அடையாளம் காணப்படுகின்ற போது மோதலுக்கான சூழமைவு ஏற்படுகின்றது. இது மோதலின் முதற்படி என்றவகையில் உள்ளார்ந்த மோதல் என அழைக்கப்படலாம்.

***வெளிப்பாடு:*** உள்ளார்ந்த மோதல் வெளிப்படையானதாக மாற்றமடைவதற்கு மோதலை தூண்டுகின்ற நிகழ்வு ஒன்று ஏற்பட வேண்டியதவசியம். தூண்டும் நிகழ்வு அல்லது திருப்புமுனை ஏற்படுகின்றவரை மோதல் என்பது நடத்தை அற்ற நிலையில் வெறுமனே உளவியல் ரீதியான ஒன்றாகவே காணப்படும். ஒரு வன்முறை நிகழ்வு, புதிய சட்டமொன்றின் அறிமுகம் போன்றவை திருப்பு முனைகளாக அமையக் கூடும்.

***தீவிரமடைதல்:*** மோதல் வெளிப்படையானதாக மாற்றமடைந்ததும் மோதற் தரப்பினர் தமது இலக்குகளை அல்லது நிலைப்பாடுகளை வரையறை செய்துகொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுகின்ற அதேசமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயம் செய்து கொள்ளப்பட்ட இலக்குகளை அடைகின்ற நோக்கிலான செயற்பாடுகளிலும் ஈடுபடுவர். இது மோதல் தீவிரமடைகின்ற செயன்முறையின் ஆரம்பமாக அமையலாம்.

தீவிரமடைதல் பொதுவாக தர்க்கம் புரிதல் போன்ற மென்மையான மோதற் செயற்பாடுகளில் இருந்து தீவிர செயற்பாடுகளை நோக்கி மெதுவாக இறுக்கமடைந்து செல்லும். இறுதியில் இந்நடத்தைகள் மென்மையான வன்முறைப் பிரயோகம் என்பதிலிருந்து எதிர்த்தரப்பின் மீதான முழுமையான தாக்குதலாக மாற்றமடையலாம்.

குறிப்பாக இனமோதல்களில் அரசியல் கோசங்கள், உண்ணாவிரதம் போன்ற மென்மையான அரசியல் நடவடிக்கைகள் நிலைமாற்றமடைந்து சிறு வன்முறையாக மாற்றமடைந்து இறுதியில் முழுமையான யுத்தமாக மாற்றமடைவதுண்டு. வன்முறைப் பண்புமிக்க எல்லா உள்ளூர் சிவில் யுத்தங்களிலும் இப்பொதுவான தீவிரமடையும் போக்கு அவதானிக்கப்படலாம்.

தீவிரமடைதல் வெறுமனே நடத்தைகளின் விஸ்தரிப்பை மட்டும் குறிப்பதில்லை. அது உண்மையில் பரந்துபட்ட ஒரு விஸ்தரிப்பாக அமைய இடமுண்டு. தீவிரமடைதலின் ஒரு பகுதியாக மோதற் தரப்பினர் தாம் மோதல் இலக்கை அடைவதற்காகப் பயன்படுத்துகின்ற வளங்களின் அளவை அதிகரித்துக் கொள்வதுண்டு. வளங்கள் என்பது நிதி, நேரம் என்பதிலிருந்து மனிதவளம், ஏனைய யுத்தப் பொருட்கள் வரை பரந்துபட்ட ஒன்றாகும். உதாரணமாக சிவில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள மோதற்தரப்பு ஒன்று யுத்தத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் அச்சமூகத்திலுள்ள ஆண்மக்களுக்கு மேலதிகமாக சிறுவர்களையும், பெண்களையும் யுத்த செயற்பாடுகளில் இணைத்துக் கொள்ளுமாயின் அது மோதலின் தீவிரப்படுத்தலைக் குறித்து நிற்கும்.

அதே சமயம் விஸ்தரிப்பு தந்திரோபாய ரீதியானதாகவோ அல்லது பிராந்திய ரீதியானதாகவோகூட இருக்கலாம். உதாரணமாக ஒரு மோதற்தரப்பு புதிய தந்திரோபாயங்களை அதிகரித்த அளவில் பயன்படுத்துவதும் தமது செயற்பாடுகளை புதிய நிலப்பகுதிகளுக்கு விஸ்தரிப்பதும் மோதல் தீவிரமடைதலின் வெளிப்பாடுகளாகக் கருதப்பட வேண்டும். அதேபோன்று மோதல் தீவிரப்படுத்தலின் போது தரப்பினர் தமக்குச் சார்பாகப் புதிய கூட்டமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் அல்லது மேலதிக ஆதரவாளர்களைச் சேர்த்துக் கொள்ளல் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளிலும் ஈடுபடக்கூடும். (Mitchell, 1981).

***தீவிரம் குன்றல்:*** மோதல்கள் பல்வேறு கட்டங்களில் தீவிரங் குன்றுவதுண்டு. தீவிரங் குன்றலில் குறிப்பிட்ட, ஒரு தரப்பின் யதார்த்தங்கள், எதிர்த்தரப்பு பற்றிய கணிப்பீடுகள், மோதல் முறைமையினுள்ளும் அதைச் சுற்றியும் உள்ள ஏனைய மூலக்கூறுகள், செயற்பாட்டாளர்கள் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்தக்கூடிய சந்தர்ப்பமுண்டு. எனவே தீவிரங் குன்றல் என்பது கட்டாயமாகத் தீர்வை நோக்கிய ஒரு முன்னேற்றமாக இருக்க வேண்டும் என்ற அவசியம் எதுவும் இல்லை. அது ஒரு தந்திரோபாயமாகவும் இருக்கக் கூடும். அதேசமயம் தீவிரங் குன்றல் தீர்வை நோக்கிய அபிவிருத்தியாகவும் இருப்பதுண்டு. இந்நிலையில் தீவிரம் குன்றல் ஒத்துழைப்பு நடத்தைகளையும் உள்ளடக்கியதாய் இருக்கும்.

***தீர்வு:*** மோதலின் உச்சக் கட்டத்தில் மோதல் தரப்பினர் தமது முன்னைய அதாவது வன்முறை செயற்பாடுகளினூடாக இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது என உணரக்கூடும். இது தொடர்ந்து மோதலில் ஈடுபடுவதன் காரணமாக ஏற்படுகின்ற இழப்புகளினாலோ அல்லது நீண்டகால மோதலினால் ஏற்பட்ட களைப்பின் காரணமாகவோ ஏற்படக்கூடும். அத்தகைய நிலையிலேயே மோதற் தரப்பினர் மோதலில் தீவிரத்தைக் குறைப்பதன் மூலம் தீர்வை அடைந்து கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுவர்.

இதன் போது தமது உண்மையான உணர்வுகள் அல்லது பலவீனங்கள் வெளிப்படாதிருக்கும் வகையில் எதிர்த் தரப்பிற்கு சமிக்ஞைகளை அனுப்பும் முயற்சியில் ஈடுபடுவர். சர்வதேச அல்லது இன மோதல்களில் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகள் இவ்வித சமிக்ஞைகளாகக் கருதப்படுவதுண்டு. இதன் ஒரு தொடர்ச்சியாக மோதற் தரப்பினர் பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளும் நோக்கில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடும். இவ்விதமான பேச்சுவார்த்தைகள் நேரடியானவையாகவோ அல்லது திரைமறைவில் மேற்கொள்ளப்படுபவையாகவோ, உத்தியோக பூர்வமானவையாகவோ அல்லது உத்தியோக பூர்வமற்றவையாகவோ இருப்பதுண்டு.

அதேசமயம் மோதற் தரப்பினர் தமது சமாதான முயற்சிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுமுகமாக ஒரு மூன்றாந்தரப்பின் ஒத்துழைப்பை நாடுவதும் உண்டு. மூன்றாந்தரப்பு என்பது ஒரு தனி நபராகவோ, பல தனிநபர்கள் ஒன்றிணைந்த குழுவாகவோ, ஒரு நிறுவனமாகவோ அல்லது ஒரு அரசாகவோ கூட இருக்க முடியும். மிக மோசமான உள்ளூர் மோதல்கள் அல்லது சர்வதேச மோதல்கள் மூன்றாந்தரப்பு ஒன்றின் உதவி இன்றி தீர்க்கப்படுவது கடினமானது எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. சமாதானமாக மோதலைத் தீர்க்கும் முயற்சிகள் மோதல் தீர்விற்கு வழி ஏற்படுத்தலாம் அல்லது தோல்வியடையலாம். இவ்விரு வகையான விளைவுகளுக்கும் பல அனுபவரீதியான உதாரணங்கள் காணப்படுகின்றன.

***தீர்வின் பின்னரான நிலை:*** வெற்றிகரமான தீர்வு முயற்சிகள் பொதுவாக இணக்கத்தில் அல்லது ஒப்பந்தத்தில் முடிவுறுவதுண்டு. இவ்வுடன்படிக்கைகள் எழுதப்பட்டவையாகவோ அல்லது வெறுமனே புரிந்துணர்வு அடிப்படையிலானவையாகவோ இருக்க முடியும். உயர் மட்டங்களிலான தீர்வுகள் பொதுவாக எழுதப்பட்டவையாக இருப்பதுண்டு. கீழ் மட்டங்களில் உதாரணமாக தனிநபர் மோதல்கள் அல்லது குடும்ப மோதல்களில் தீர்வுகள் புரிந்துணர்வு ரீதியானவையாக இருப்பதற்கான சந்தர்ப்பம் பெருமளவு காணப்படுகின்றது.

சமாதானமான வழிமுறைகளினூடாக அடையப்படுகின்ற தீர்வுகள் இரு தரப்பினருக்கும் திருப்தியளிப்பதாக இருப்பின் குறிப்பிட்ட ஒரு மோதல் நிரந்தரமாகத் தீர்க்கப்படக்கூடும். அவ்வாறில்லாவிடின் மோதலின் பின்னரான சூழமைவு மீண்டும் புதிய மோதல்களுக்கு வழி ஏற்படுத்தும். அதாவது இந்நிலை மோதல் வாழ்க்கைச் சக்கரத்தில் ''தோற்றம்'' என்கின்ற முதலாவது நிலையை மீண்டும் அடையும்.

தீர்வின் பின்னரான நிலையில் மிக முக்கியமான இன்னுமோர் விடயம் இணங்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தல் ஆகும். மோதற் தீர்வில் ஒப்பந்தங்கள் அடையப்படுவது எந்த அளவிற்கு முக்கியமானதோ அதே அளவிற்கு முக்கியமானது ''நடைமுறைப்படுத்தல்'' என்பதாகும். நடைமுறைப்படுத்தலின் பொறுப்பு இரு தரப்பையும் சார்ந்ததாக இருக்கும். இந்நிலையில் ஒரு தரப்பு தமது பொறுப்புகளிலிருந்து விலகிக் கொள்வது அல்லது பொறுப்பை நிறைவேற்றாதிருப்பது மீண்டும் மோதலுக்கு வழி ஏற்படுத்துவதாய் இருக்கும். வெற்றிகரமாக அடையப்பட்ட எத்தனையோ சமாதான உடன்படிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நடைமுறைப்படுத்தல்" பிரச்சினை காரணமாக தோல்வியடைந்துள்ளன.

## 11. மோதல் ஆய்வு

எமது வாழ்வுடன் தொடர்புடைய சில மோதல்கள் மிகுந்த அழிவுத்தன்மை வாய்ந்தவையாக இருக்கக்கூடும். இவை அழிவுத்தன்மை வாய்ந்தவை என்பதன் காரணமாகவே அவசியம் தீர்க்கப்பட வேண்டியவையாக மாறி இருக்கக்கூடும். ஒரு மோதல் எப்பொழுது அழிவுத்தன்மை உடையதாக மாற்றமடைகின்றது என்பதை நிர்ணயிப்பதற்கு நிச்சயமான நிபந்தனைகள் காணப்படவில்லை. ஏனெனில் அழிவுத்தன்மை என்பதுகூட ஒப்பிட்டு ரீதியானதே அன்றி நிச்சயமானதல்ல. இது குறிப்பிட்ட ஒரு நபரின் அல்லது குழுவின் மதிப்பீட்டு முறைமை அல்லது விழுமியங்கள் அடிப்படையில் வேறுபடும். உதாரணமாக மோதல் ஒன்றில் ஒரு நபர் இறப்பது ஆக்கக்கேடானது என குறிப்பிட்ட ஒரு தரப்பால் கருதப்பட, மறுதரப்பு தமது இலக்குகள் அடையப்பட மேலும் பலர் கொல்லப்பட வேண்டும் எனக் கருதலாம்.

இவ்வித கருத்து வேறுபாடுகளுக்கிடையிலும் கூட குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் ஒரு மோதல் ஆக்கக்கேடானது என மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் மட்டுமன்றி அம்மோதல் புறச்சூழலில் இருக்கின்ற பல்வேறு தரப்பினராலும் உணரப்படலாம். அத்தகைய நிலையில் அக்குறிப்பிட்ட மோதல் அவசரமாக தீர்க்கப்பட வேண்டியதொன்றாக மாற்றமடைகின்றது. உதாரணமாக இலங்கையில் காணப்படுகின்ற இனமோதல் ஆயுத ரீதியாகத்தீர்க்கப்பட வேண்டும் என்கின்ற அபிப்பிராயம் மோதல் தோற்றம் பெற்ற ஆரம்பகாலத்தில் பரவலாகக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் இங்கு வாழ்கின்ற சிறிய ஒரு பிரிவினரே மோதல் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். ஆயினும் இன்று ஏறத்தாழ இருபது ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் மோதல் ஆக்கக்கேடானதாக மாறியுள்ளது என்பது மோதல் முறைமையினுள் இருக்கின்ற பெரும்பாலானோராலும், மோதல் முறைமையைச் சூழவுள்ள ஏனைய தரப்பினராலும் பெருமளவு உணரப்பட்டுள்ளது. இன்று இலங்கையின் இன மோதல் ஆயுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனக்கருதுவோர் மிகச் சிறுதொகையினராகவே இருக்கக்கூடும்.

குறிப்பிட்ட ஒரு மோதல் சமாதான வழிமுறைகளினூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று உணரப்படுகின்ற போது மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதானமான ஒரு செயற்பாடு அக்குறிப்பிட்ட மோதலுடன் தொடர்புடைய பல்வேறு பரிமாணங்களையும் புரிந்து கொள்வதாகும். குறிப்பாக அம் மோதலைத் தீர்ப்பதில் மூன்றாந்தரப்பாக உதவக்கூடியவர்கள் மோதல் பற்றிய சரியான அறிவைக் கொண்டிருப்பது மிக அவசியமானதாகும். குறிப்பிட்ட ஒரு மோதல் பற்றிய சரியான தெளிந்த அறிவு இன்றி ஒரு மூன்றாந்தரப்பாக மோதல் முறைமையில் தலையிடுவது நிச்சயமாக பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். மாறாக மோதல் பற்றிய தெளிந்த அறிவு சிறந்த, வெற்றியளிக்கக்கூடிய தலையீட்டுத் தந்திரோபாயத்திற்கு உதவக்கூடும். எனவே மோதற்தீர்வு பற்றிச் சிந்திக்கின்ற போது அவசியமான நிபந்தனை மோதல் ஆய்வு என்பதாகும்.

மோதல் ஆய்வுகள் பல்வேறு அடிப்படைகளில் மேற்கொள்ளப்படலாம். இன்று பல மோதல் ஆய்வு உருமாதிரிகள் (Models) காணப்படுகின்றன. உதாரணமாக மோதல் படவரைபு, மோதல் முக்கோணம், மோதல் வெங்காயம், மோதல் விருட்சம், மோதல் பிரமிட் போன்ற பல்வேறு ஆய்வு உருமாதிரிகள் முன்வைக்கப்பட்டுள்ளன (Fisher et al, 2000). எவ்வாறாயினும் ஒன்றுபடுத்தப்பட்ட இவ்வுருமாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு மோதல் ஆய்வில் அடையாளம் காணப்பட வேண்டிய அம்சங்களைப் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்;

(i) மோதற் தரப்பினர்

(ii) பிரச்சினைகள்

(iii) காரணங்கள்

(iv) வரலாறு

(v) அபிப்பிராயங்கள்

(vi) தந்திரோபாயங்கள்

(vii) நலன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல் ஒன்று பற்றி ஆய்வு செய்கையில் முதலில் அம்மோதலுடன் தொடர்புடைய *தரப்பினர்* யார்? அவர்கள் எவ்வகையில் அம்மோதலுடன் தொடர்புபட்டுள்ளனர் என்பவை தெளிவாகக் கண்டறியப்பட வேண்டும். மோதல் ஒன்றில் ஈடுபட்டுள்ள எல்லாத்தரப்பினரும் சமமான மட்டத்தில் அம்மோதலுடன் தொடர்புபட்டிருப்பதில்லை. சில தரப்பினர் மோதலுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருக்க ஏனைய பலர் மறைமுகமாகவோ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வகையிலோ தொடர்புபட்டிருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் மோதல் முறைமை ஒன்றிற்கு வெளியில் உள்ள தரப்பினரும் கூட மோதலுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கலாம். உதாரணமாக உள்ளூர் இனப்பிரச்சினை ஒன்றில் பிராந்தியத்திலுள்ள வல்லமைமிக்க நாடு ஒன்று நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கலாம். இத்தரப்பினரது பலம் அல்லது செல்வாக்கு எவ்வகைப்பட்டது? அவர்கள் ஒருவருடன் ஒருவர் எவ்விதம் தொடர்புபட்டுள்ளனர்? அவர்கள் மோதலின் அடிப்படைப் பிரச்சினையுடன் எவ்விதம் தொடர்புபட்டுள்ளனர் என்பவையும் முக்கியமானவை.

அத்துடன் மோதலின் அடிப்படை *பிரச்சினை* பற்றிய நுணுக்கமான அறிவும் அவசியம். இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது யாதெனில் மோதலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தரப்பினரும் தமது நலன்களுக்கு ஏற்ற வகையில் மோதலின் அடிப்படை பிரச்சினையை வரையறை செய்திருப்பர் என்பதாகும். இவ்வேறுபட்ட வரைவிலக்கணங்களுக்கு இடையில் தொக்கி நிற்கின்ற பிரதானமான பிரச்சினை அடையாளங் காணப்பட வேண்டும். மோதலின் அடிப்படைப் பிரச்சினையைச் சுற்றி உடனடியான வேறு பிரச்சினைகள் அல்லது சிறு பிரச்சினைகளும் காணப்படலாம்.

நாம் ஏற்கனவே கூறியுள்ளது போன்று ஒவ்வொரு மோதலுக்கும் விசேடமான *காரணிகள்* காணப்படும். இவை அடிப்படைக்காரணிகள், உடனடிக்காரணிகள் என்ற வகையில் அடையாளங் காணப்படலாம் (உதாரணமாகப் பார்க்க Keethaponcalan, 2000). உளவியல், பொருளாதாரம், வரலாறு போன்றவை அடிப்படைக் காரணிகளாக செயற்படுகின்ற போது வன்முறைத் தாக்குதல்கள், பாகுபாடான சட்ட அறிமுகம் போன்றவை உடனடிக்காரணிகளாகச் செயற்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலம் நீடித்திருக்கின்ற சூழு மோதல்களில் *வரலாறு* முக்கியமான ஒரு காரணியாகும். இவை மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் நலன்களுக்கு ஏற்ப வேறுபட்ட வகையில் முன்வைக்கப்படுபவையாக இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வே கூட இரு வேறு மோதற் தரப்பினரால் இரு வேறுபட்ட வகையில் விபரிக்கப்படலாம். பல மோதல்களில் இது பொதுவானதாகும் என்பதுடன் பெருமளவிற்கு மோதற் தரப்பினரின் அபிப்பிராயங்களுடன் தொடர்புடையதாகும். மோதற்தரப்பினரின் அபிப்பிராயங்கள் பெரும்பாலான விடயங்களில் வேறுபட்டதாயிருக்கலாம். இவ்வேறுபாடுகளுக்கிடையிலும் காணப்படக்கூடிய பொதுவான அபிப்பிராயங்கள் மோதற் தீர்வின் அடிப்படையாய் அமையக்கூடும்.

அத்துடன் மோதற் தரப்பினர் தமது இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் வேறுபட்ட காலங்களில் வேறுபட்ட *தந்திரோபாயங்களை* கடைப்பிடித்திருப்பர். இவை அவர்களது மனோபாவங்களை வெளிப் படுத்துபவையாகவும், எதிர்கால நடவடிக்கைகளை சுட்டிக்காட்டுபவையாகவும் அமையக்கூடும்.

குறிப்பாக மோதற்தரப்பினரின் உண்மையான *நலன்கள்* யாவை என்பது முக்கியமானது. பொதுவாக மோதற்தரப்பினர் வெளிப்படையாகக் கூறுகின்ற நிலைப்பாடு ஒன்று காணப்படும். இந்நிலைப்பாடே தமது இலக்காக இவர்களால் கருதப்படும். இந் நிலைப்பாடுகளும் மோதற்தரப்பினரின் உண்மையான நலன்களும் ஒன்றாக இருக்க வேண்டும் என்கின்ற அவசியமில்லை. அதாவது பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகக் கூறப்பட்ட நிலைப்பாடு ஒன்றாக இருக்க உண்மையில் அவர்கள் அடைய விரும்புகின்ற நலன் வேறொன்றாக இருப்பதற்கு சந்தர்ப்பமுண்டு. இந்நலன்களைத் தரப்பினர் உணர்ந்தவர்களாக இருக்கலாம் அல்லது அவ்விதம் இல்லாமலும் இருக்கலாம். குறிப்பிட்ட ஒரு மோதல் ஆழமாக ஆராயப்படுகின்ற போது மட்டுமே நிலைப்பாடுகளின் பின்னால் இருக்கக்கூடிய நலன்கள் அடையாளம் காணப்படலாம். மோதற் தீர்வு முயற்சிகளின் போது நிலைப்பாடுகளில் அன்றி நலன்களில் கவனம் செலுத்துவது சமாதான முயற்சிகளை இலகுபடுத்தும் எனக்கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. முடிவுரை

இதுவரை நாம் மோதல்கள் எவ்விதம் தோற்றம் பெறுகின்றன, அவற்றின் பண்புகள் யாவை, அவற்றின் பின்னணியில் செயற்படுகின்ற காரணிகள் யாவை, என்பன போன்ற மோதல் எனும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களை ஆராய்ந்துள்ளோம். இந்நூல் சாதாரண மக்களுக்கும் புரியக்கூடிய வகையில் எழுதப்பட வேண்டிய ஒரு அவசியம் இருந்தமையினால் நடைமுறையில் சிக்கல் வாய்ந்தவையாக இருக்கக்கூடிய சில விடயங்கள் எளிமைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் நாம் இங்கு அவதானித்துள்ள விடயங்களில் முக்கியமான ஒன்று மோதல்களைப் பொதுவாகத் தவறானவை என்றோ அல்லது பயனுடையவை என்றோ இலகுவாக வகைப்படுத்தி விடமுடியாது. உண்மையில் ஒரு மோதலின் பயன்பாடு அது எவ்விதம் முன்னெடுக்கப்படுகின்றது என்பதிலேயே தங்கியுள்ளது. எனவே மோதல் நடத்தைகள் சரியான முறையில் ஒழுங்குபடுத்தபடுகின்ற போது அவை பயனுடையவையாக மாற்றமடைவதற்கான சந்தர்ப்பங்கள் பெரிதும் காணப்படுகின்றன.

அத்துடன் நாம் அவதானித்த இன்னுமோர் முக்கியமான விடயம் பெரும்பாலான மோதல்கள் தீர்க்கப்படலாம் என்பதாகும். ஒரு மோதல் எப்பொழுது அழிவுத்தன்மையுடையதாக மாற்றமடைகின்றது என்பது அம்மோதலில் ஈடுபட்டுள்ளோருக்கு இலகுவாகப் புரியக்கூடும். அத்தகைய நிலையில் அதனை வன்முறையற்ற முறையில் தீர்த்துக்கொள்வது பற்றி சிந்திப்பது அவசியமானதாகும். இத்தகைய நிலைமாற்றம் ஒன்று ஏற்படுவதோ அல்லது அந்நிலையை நோக்கி முன்னேறுவதோ இலகுவான விடயங்கள் அல்ல. குறிப்பாக நீண்டகால யுத்தங்களின் பின்னர் இத்தகைய நிலைமாற்றம் கடினமானதாகும். அவ்வகையில் அமைதியான வழிமுறைகளினூடாக மோதல்களைத் தீர்த்துக் கொள்வது அல்லது சமாதானம் என்பதுடன் தொடர்புடைய பிரச்சினைகளை அறிமுகப்படுத்துவதே இவ் ஏட்டுவரிசையின் நோக்கமாகும். இந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்குத் தேவையான தக்க அடிப்படையை இந்நூல் வழங்கியிருக்கும் என நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Bibliography


Abraham, M.F. (1982). *Modern Sociological Theory: An Introduction.* Calcutta: Oxford University Press.

Coser, L.A. (1956). *The Functions of Social Conflict.* London: Routledge & Kegan Paul.

Deutsch, M. (1973). *The Resolution of Conflict: Constructive and Destructive Processes.* New Haven: Yale University Press.

Galtung, J. (1999). *Peace by Peaceful Means : Peace and Conflict, Development and Civilization.* London: Sage.

Glasl, F. (1999). *Confronting Conflict.* Stroud, United Kingdom: Hawthornpress.

Gurr, T.R. & Harff, B. (1994). *Ethnic Conflict in World Politics.* Boulder: Westview Press.

Fisher, S. et al (2000). *Working with Conflict: Skills & Strategies for Action.* London: Zed Books.

Folberg, J. & Taylor, A. (1993). The Nature of Conflict, in Lewicki, R.J. et al (eds) *Negotiation: Readings, Exercises and Cases.* Boston: Richard D. Irvin, inc.

Keethaponcalan, S.I. (2000). Understanding the Ethnic Conflict and Peace Efforts in Sri Lanka: A Conflict Resolution Perspective, in Uyangoda, J. (ed) *Conflict Resolution & Peace Studies: An Introductory Handbook.* Colombo: CEPRA.

Miall, H, Ramsbotham, O. & Woodhouse, T. (1999). *Contemporary Conflict Resolution.* Cambridge: Polity Press.

Mitchell, C.R. (1981). *The Structure of International Conflict.* London: Macmillan.

Stagner, R. (1967). *Psychological Aspects of International Conflicts.* Belmont, California: Brooks & Cole.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலன் தனது ஆரம்பக் கல்வியை கொழும்பில் பெற்றதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசியல் சிறப்புத்துறை (B.A,Hons) பட்டதாரியுமாவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகளுக்கான முதுமாணிப் பட்டத்தைப் (M.A) பெற்றுள்ள இவர் அமெரிக்க வேஜினியா மாநிலத்தில் உள்ள ஜோர்ஜ் மேசன் பல்கலைக்கழகத்தின் மோதல் தீர்வியல் துறை முதுமாணிப்பட்டத்தையும் (M.Sc.) பெற்றுள்ளார். அத்துடன் இவர் அமெரிக்க புளொரிடா மாநிலத்தின் நோவா சவுத்ஈஸ்ட்டன் பல்கலைக்கழகத்தில் மோதல் தீர்வியல் துறையில் கலாநிதிப் பட்டத்தையும் (Ph.D) பெற்றுள்ளார். தற்பொழுது கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் கலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலன் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரிகரண ஆய்வு நிலையம் மற்றும் ஜெர்மனியின் நிலை மாற்றத்திற்கான பொன் (Bonn) சர்வதேச நிலையம் ஆகியவற்றில் ஆய்வாளராகக் கடமையாற்றியுள்ளார். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வியியல் சஞ்சிகைகளில் பல ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ள இவர் இலங்கை இன மோதல், சமாதான செயன்முறை என்பவை பற்றிய ஆய்வுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org